**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093632

15/2019/AC/VPM

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 21.08.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act-1988, as amended Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: P.C. (Amendment) Act-2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 02.11.2018 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.11.2018 Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக On the Direction of DVAC memo: SC.NO: 40377/2018/POL/VPM, Dt: 16.08.2019

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திருநாவலூர், காவல் நிலையம், 30 கி.மீ. தென் கிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ந. தேவநாதன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. P. ஆதிலிங்கம் போஸ், காவல் ஆய்வாளர், திருநாவலூர் காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உரிய அலுவலரிடம் (Competent Authority) அனுமதி பெற வேண்டியிருந்ததால் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............—............ பதவி ..........—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

ந. தேவநாதன் 21/8/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

ந. தேவநாதன்,
காவல்துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
விழுப்புரம்

Name: பெயர்
Rank: நிலை ............................ No. எண் .........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.08.2019 at 15.30 hrs

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

கடந்த 02.11.2018 ஆம் தேதி 16.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் திருநாவலூர் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் ஆய்வாளர் திரு.P.ஆதிலிங்கம்போஸ் என்பவர் மணல் கடத்தும் நபர்களிடம் தீபாவளி மாமூல் வசூலிப்பதாக விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ந.தேவநாதன் என்பவருக்கு கிடைத்த நம்பகமான தகவலின்படி மேற்படி காவல் நிலையத்தை ஆய்வு செய்ய காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அரசு சாட்சிகள் திரு.K.வெங்கடேசன், உதவியாளர், கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின்சார வாரியம், விழுப்புரம் மற்றும் திரு.M.நடராஜன், உதவியாளர், செயற்பொறியாளர் அலுலவலகம், பொதுப்பணித்துறை விழுப்புரம் ஆகியோர் முன்னிலையில் சுமார் 19.30 மணியளவில் திருநாவலூர் காவல் நிலையத்தில் திடீராய்வு மேற்கொள்ளப்பட்டது, அதன் விபரம் பின்வருமாறு.

அப்போது திருநாவலூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.P.ஆதிலிங்கம்போஸ் காவல் நிலையத்தின் முன்பு வலது புறத்தில் மணல் வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தின் அருகே நின்று கொண்டு பின்னர் பெயர் தெரிந்த திரு.K.கல்யாணராமன் மற்றும் திரு.N.சக்திவேல் ஆகிய இரண்டு நபர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் ஆய்வுக்குழுவின் அறிமுகப்படுத்திக் கொண்டபோது அவர் மிகவும் பதட்டமடைந்தார். அவரை ஆசுவாசப்படுத்தி அவரையும் அவருடன் இருந்த தனி நபர்களையும் காவல் நிலையத்தின் ஆய்வாளர் அறைக்கு அழைத்து வந்து அமரசெய்தேன். அப்போது நிலைய பாரா திரு.T.ராமதாஸ் கா-2055, திரு.A.ராஜேந்திரன் உதவி ஆய்வாளர் (GD பொறுப்பு), திரு.C.மணி, உதவி ஆய்வாளர், திரு.வெங்கடேசன் சிறப்பு உதவி ஆய்வாளர், திரு.K.சக்திவேல் HC 1470, ஆகியோர் காவல் நிலையத்தினுள் பணிசெய்து கொண்டிருந்தனர் அவர்களை அவரவர்கள் இடத்தில் அமரச்சொன்னதின் பேரில் அனைவரும் அவரவர் இடத்தில் அமர்ந்து கொண்டனர்.

பின்பு காவல் நிலையத்தில் இருந்த காவல் ஆய்வாளர் மற்றும் காவல் ஆளிநர்களிடம் எங்களை சுய பரிசோதனை செய்துகொண்டு எங்களிடம் எந்தவித் பணமோ பொருளோ இல்லை என்பவதை உறுதி செய்த பின்னர் காவல் ஆய்வாளரையும் அவரது அறையையும் சோதனை செய்ததில் அவரடமிருந்தும் அவர் அமர்ந்திருந்த மேசையின் டிராயரில் ரூபாய் 1,00,000/- மும், அவரது அறையில் இருந்த கப்போர்டில்

இருந்து ரூபாய் 1,29,400/-மும் ஆக மொத்தம் ரூபாய் 2,29,400/- இருந்தது மேற்படி தொகை குறித்து ஆய்வாளரிடம் கேட்க அவர் மேற்படி தொகை தீபாவளிக்காக தனக்காகவும், காவல் ஆளிநர்களுக்கு கொடுப்பதற்காகவும் தீபாவளி பரிசாக மணல் வண்டி ஒட்டுநர்களிடம் இருந்தும் மற்ற வியாபாரிகளிடம் இருந்து லஞ்சமாக பெற்ற பணமாகும் என்று கூறியதால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது.

பின்பு தனிநபர்களான திரு.K.கல்யாணராமன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் இருந்து ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் தனது லாரியால் ஏற்பட்ட விபத்து வழக்கு சம்மந்தமாக ஆய்வாளருக்கு கொடுக்க கொண்டு வந்ததாக தெரிவித்தார் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்பு மற்றொரு தனிநபரான திரு.N.சக்திவேல் சோதனை செய்ய அவரிடம் இருந்த ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது மேற்படி தொகை குறித்து கேட்க அவர் தனது மாமா மீது காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டு புகார் மனு சம்மந்தமாக காவல் ஆய்வாளருக்கு கொடுக்க கொண்டு வந்ததாக தெரிவித்தார். அந்த தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த தொகை ரூ.2,39,400/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது.

பின்பு காவல் ஆய்வாளர் அவர்களிடம் வேறு ஏதேனும் லஞ்சப்பணமோ அல்லது பரிசு பொருட்களோ அவரது கட்டுப்பாட்டில் உள்ளதா என கேட்டதற்கு தீபாவளிக்காக காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் ஆளிநர்களுக்கு பட்டாசு பெட்டிகள் மற்றும் துணிகள் ஆகியவற்றை தனது செலவில் வாங்கி தான் தங்கியிருக்கும் ஆய்வாளர் அரசு குடியிருப்பில் வைத்துள்ளதாக தெரிவித்ததன் பேரில் அங்கு சென்று பார்த்தபோது 107 பட்டாசு பரிசு பெட்டிகளும், ஆடவருக்கான ரேமண்ட் கம்பணி பேண்ட் சர்ட் துணிகள் 11ம் ராமராஜ் கம்பணி பேண்ட் சர்ட் துணிகள் 28ம் பெண்களுக்கான சுடிதார் 6ம் உள்ளது உள்ளபடியே ஆய்வாளர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.

மேற்படி பட்டாசு பெட்டிகளை உரிய பாதுகாப்பின் பொருட்டு காவல் நிலையத்திற்கு அருகில் கடலூர் சித்தூர் சாலையில் கொரட்டூர் கிராமத்தில் உள்ள அரசு உரிமம் பெற்ற சண்முகம் வெடிபொருள் கிடங்கின் உரிமையாளர் திரு.S.செந்தில்குமார் என்பவரை செல்பேசி எண் 9943661701 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு அவரை வரவழைத்து மேற்படி கிடங்கில் பாதுகாப்பு நிமித்தம் பட்டியலிட்டு ஒப்படைக்கப்பட்டு அவரிடம் அதற்கான ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்படி திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.2,39,400/-, புதிய துணிகள் மற்றும் 107 பட்டாசு பெட்டிகள் ஆகியவை தீபாவளி பரிசாக மணல் வண்டி ஓட்டுநர்களிடம் இருந்தும் மற்ற வியாபாரிகளிடம் இருந்து லஞ்சமாக பெற்றது என விசாரணையில் தெரியவந்ததால் குற்ற அலுவலர் திருநாவலூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.P.ஆதிலிங்கம்போஸ் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய பிரிவு 17(A) (1) Prevention of Corruption Act-1988 as Amended P.C. (Amendment) Act 2018 ன்படி மேற்படி குற்ற அலுவலரின் உரிய அலுவலரான (Competent Authority) காவல்துறை துணை இயக்குநர், விழுப்புரம் சரகம் அவர்களின் கடித எண் C.No.B2/17218/2018, Dated:17.07.2019 ன்படி பதிவுறு வழக்கு (Regular case) பதிய அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி குற்ற அலுவலர் திரு.P.ஆதிலிங்கம்போஸ் காவல் ஆய்வாளர், என்பவர் மீது u/s 7 P.C. Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி இன்று 21.08.2019 தேதி 15.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/209/AC/VPM ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்குகள்), விழுப்புரம் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பில் வைக்கப்பட்டது.

(signature) 21/8/19

**Deputy Superintendent of Police,**
**Vigilance and Anti-Corruption,**
**Viluppuram.**